# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 6 | இதழ்: 9 | ஜூன் : 2022 | ரூ.20/- |
| Volume: 6 | Issue: 9 | June : 2022 | Rs.20/- |



**SHRI MAHA MERU MANDALI TRUST**

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

# வேதபாரதி

மற்றும்

# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

இணைந்து நடத்தும்



# பௌர்ணமி பாராயணம்

# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

**வைகாசி 31, செவ்வாய் 14.06.2022**

**நேரம் : மாலை 6.00 மணி**

*இடம் :*

**அருள்மிகு ஞானசித்தி விநாயகர் ஆலயம்,**

*அன்னை இந்திரா நேகர், வேளச்சேரி, சென்னை – 42.*

**அனைவரும் வருக! இறையருள் பெருக!!**

மேலும் தொடர்புக்கு

**9443495950 / 9444060346 / 9444132926**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 33

**ப்[1]ரணோ தே[3]வீ ஸரஸ்வதி[1] வாஜேபி[4]ர்வாஜிநீவதி[1]|**
**தீ[4]நாமவித்[1]ர்யவது ||**

**- ரிக் வேதம், மண்டலம் 6, அஷ்டகம் 4, ஸூக்தம் 61, ரிக் 4)**

**பொருள் :**

*பணிவோரைப் பாதுகாக்கும் அறிவே உருவான ஸரஸ்வதி அன்னை நமக்கு அறிவாற்றலையும், சொல்லாற்றலையும், இடைவிடாது அருளிப் பாதுகாப்பாளாக.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 6 இதழ்: 9

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 6 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஆனி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 16 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 19 |
| குழந்தைகள் பகுதி | 22 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 24 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு | 25 |
| தர்மத்தின் குரல் | 26 |
| ஔவையார் | 31 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 32 |
| சாதனைப்பறவைகள் | 35 |
| லண்டன் பயணம் | 39 |
| பசு சர்வரோக நிவாரணி | 42 |
| தென் கயிலாயங்கள் | 46 |
| ஸமுத்ர ஹாரத்தி | 50 |
| புதுவை நிகழ்ச்சி | 52 |



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# வேதபாரதி செய்திகள்

**சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோளும், அறிவிப்பும்**

*ஒரு ஆண்டு சந்தா ரூ.200/-*

*10 ஆண்டு சந்தா ரூ,1500/-*

*2021 ஜுன் மாதம் ஓர் ஆண்டு சந்தா செலுத்தியவர்களின் சந்தா காலம் 2022 மே மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. இந்த ஒரு மாதம் (ஜுன் 2022) அவர்களுக்கு புத்தகம் இலவசமாக அனுப்பப்பட்டுள்ளது. 30.06.2022 க்குள் அவர்கள் சந்தா தொகையை செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். புதுப்பிக்கவில்லையெனில் 2022 ஜுலை மாதம் முதல் அவர்களுக்கு "வேதபாரதி செய்திகள்" புத்தகம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.*

*சந்தாவை புதுப்பித்துக் கொள்பவர்களும், புதியதாக சந்தா செலுத்த விரும்புகிறவர்களும், சந்தா தொகையை காசோலை அல்லது* DD *மூலம் செலுத்தலாம். காசோலை அல்லது* DD *யை* **VEDABHARATHI** *என்ற பெயரில் எடுத்து கீழ்க்கண்ட நிர்வாக முகவரிக்கு தங்களுடைய முழுவிலாசத்துடனும் கைபேசி எண்ணுடனும் அனுப்ப வேண்டும்.*

**"வேதபாரதி"**

*எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு,*
*பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.*

*சந்தா தொகையையோ, நன்கொடையையோ வங்கி மூலம் வழங்கிட விவரங்கள்.*

**VEDABHARATHI**
**CITY UNION BANK,VELACHERY BRANCH**
**A/C NO. 510909010005286 | IFSC : CIUB 0000262**

Ph 94434 95950 | Email: vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு...

## 47. உயர்ந்த எண்ணம்

*ஸ்வாமி விவேகானந்தர் (நரேந்திரன்) சிறுவயதில் பள்ளிக்குச் செல்லும்போது குதிரை வண்டியில்தான் செல்வார். அவருக்கு அந்த வண்டியை ஓட்ட வேண்டும் என்ற ஆசை.*

*ஒரு நாள் வகுப்பு ஆசிரியர் விவேகானந்தரிடம் "நீ பெரியவன் ஆனால் என்னவாக விரும்புகிறாய்?" என்று கேட்டார். அதற்கு விவேகானந்தர் நான் குதிரைவண்டிக்காரனாக ஆவேன்" என்றார். இதைக் கேட்டதும் வகுப்பில் மற்றமாணவர்கள் விவேகானந்தரை கிண்டல் செய்தார்கள்.*

*வீட்டிற்கு வாடிய முகத்துடன் சென்றபோது விவேகானந்தரின் தாயார் அவனுடைய கவலைக்கு காரணம் கேட்டார். விவேகானந்தர் நடந்த விவரத்தைக் கூறினார். அதைக்கேட்ட அவனுடைய தாய் அவனை "நீ கட்டாயம் குதிரைவண்டிக்காரனாக ஆவாய். ஆனால் எப்படிப்பட்ட குதிரைவண்டி என்று நீ அறிய வேண்டும் அல்லவா? என்று கூறிவிட்டு அவனை வீட்டின் பூஜை அறைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு பெரிய சித்திரத்தைக் காண்பித்தார். அந்த சித்திரத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு தேர் ஓட்டும் சாரதியாக காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார். அதைக் குழந்தைக்கு காட்டி "நீயும் இதுபோல் ஒரு குதிரைவண்டிக்காரனாக ஆகி இந்த உலகத்தை காக்க வேண்டும். அதுதான் என்னுடைய ஆசை" என்றார். அதே போல் மஹாத்மா காந்திக்கும் ராமபிரானின் சக்தியை காட்டிக் கொடுத்ததும் அவருடைய தாயார்தான்.*

ஒரு ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது கடைகளிலிருந்து யாருக்கும் தெரியாமல் சிறிய சிறிய தின்பண்ட பொருட்களைத் திருடிக்கொண்டு வருவான். இதைத் தன் தாயிடம் சொல்லமாட்டான். அவனுடைய தாயாரும் அது எங்கிருந்து கிடைத்தது என்று கேட்காமல் அவரும் அதில் பங்குபோட்டு சாப்பிடுவார்.

அவன் வளர்ந்து பெரியவன் ஆனதும் ஒரு திருடனாக மாறிவிட்டான். பல இடங்களில் திருடி கொலைகாரனாகவும் மாறிவிட்டான். கடைசியில் போலீசில் மாட்டிக்கொண்டு நீதிமன்றம் அவனுக்கு தூக்குதண்டனை விதித்தது. தண்டனை நிறைவேறுவதற்கு முன் அவனுடைய தாய் அவனை பார்க்கவந்தார். ஆனால் அவன் அவளை பார்க்க மறுத்துவிட்டான். காரணம் கேட்டபோது "சிறுவயதில் நான் திருடிக்கொண்டு வந்தபோது இது எப்படி கிடைத்தது என்று கேட்டு என்னைத் தண்டித்து நல்ல வழியில் வளர்த்திருந்தால் நான் இந்த கதிக்கு ஆளாயிருக்கமாட்டேன்" என்றானாம்.

குழந்தைகளின் உண்மையான வளர்ச்சிக்கு நல்ல உணவு மட்டும்போதாது அன்பு, அரவணைப்பு, ஆறுதல், பாராட்டுதல், நல்ல செயல்களில் ஊக்கப்படுத்துதல், அடுத்தவர்களை மதிக்க கற்றுத்தருதல் போன்றவையும் மிக மிக தேவை.

**"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே".**

**D. சூரியநாராயணன்**

# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ கூர்ம ஜயந்தி



**கூர்ம அவதாரம் :** பகவான் மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் பத்து. அதாவது **மச்ச, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம, பலராம, ராம, கிருஷ்ண, கல்கி.** இவற்றில் கல்கி அவதாரம் இன்னும் நிகழவில்லை. அவர் எடுத்துள்ள அவதாரங்கள் பரிணாம வளர்ச்சியையும் சகல ஜீவராசிகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுகின்றன. பகவான் அவதாரங்கள் எடுத்ததன் நோக்கமே அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவே. அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் **"கூர்ம அவதாரம்"**. இந்த அவதாரத்தில் மட்டும்தான் பகவான் தீயவர்களை அழிக்காமல் பலருக்கும் நன்மையைக் கொடுக்கவும், பல பொருட்களை தோற்றுவித்து நற்பலனை கொடுத்தார். இந்த அவதாரம் கிருத யுகத்தில் நடைபெற்றது. கூர்ம அவதாரம் நிகழ்ந்த நாளே **"கூர்ம ஜயந்தி"** என்று கொண்டாடப்படுகிறது. ஆனி மாத

கிருஷ்ணபட்சத்தில், அதாவது தேய்பிறைதுவாதசி திதியில் திருமால் கூர்ம அவதாரம் எடுத்ததாக புராணங்கள் கூறுகின்றன.

**பகவான் மஹாவிஷ்ணு ஏன் இந்த ஆமை (கூர்ம) ரூபம் எடுத்தார்?**

அசுரர்களும், தேவர்களும் மந்தர மலையை மத்தாகவும், வாசுகி பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைந்தபோது பருமன் தாங்காமல் மந்தர மலை கடலில் மூழ்கியது. தேவேந்திரனும், தேவர்களும் பகவான் திருமாலை சரண் அடைந்தனர். பக்தர்களைக் காக்கும் திருவுளம் கொண்ட பகவான் மிகப்பெரிய ஆமையாக (கூர்மமாக) வடிவம் எடுத்து கடலில் மூழ்கி மலையைத் தாங்கிக்கொண்டு மேலே கொண்டுவந்தார். மலை நேராக நிமிர்ந்து வாசுகியால் கடையப்பட்டது. அதிலிருந்து அமிர்தம் மட்டுமல்லாமல் காமதேனு கற்பக விருக்ஷம், கௌஸ்துப மாலை போன்றபலவும் வந்து கடைசியாக தேவலோக சஞ்சீவியான அமிர்தத்தை ஏந்தியவாறு தன்வந்திரி மூர்த்தியும் தோன்றினார். இவ்வாறு தேவர்களும் பூவுலகும் நன்மை பெறசெல்வங்களை அளித்தார் கூர்ம மூர்த்தியான பகவான் திருமால்.

ஆமை என்றாலே அதை அபசகுனமாக சிலர் நினைப்பார்கள். ஆனால் ஆமை என்பது புலன்களை அடக்க காட்டப்படும் ஒரு உதாரணம். ஆமைக்கு ஏதாவது ஆபத்துவரும்போது அது தன் தலையையும் நான்கு கால்களையும் தன் ஒட்டுக்குள் ஒடுக்கிக்கொள்ளும். இதைத்தான் வள்ளுவரும் கூறினார்.

**ஒருமையுள் ஆமைப்போல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து. (குறள் எண்.126)**

**பொருள் :** ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால் அது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

இதை உணர்த்தும் விதமாகத்தான் கோயில்களில் ஆமையின் உருவம் வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 79 கோயில்களில் ஆமை உருவம் உள்ளது. கேரளாவில் எல்லா கோயில்களிலும் இதைக் காணலாம்.

**கூர்ம ஜயந்தி - 25.06.2022 சனிக்கிழமை**

பக்தர்களுக்காக பாரம் சுமந்து பாதுகாத்த கூர்ம பகவானை **"கூர்ம ஜயந்தி"** அன்று ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஸ்தோத்திரங்கள் அல்லது கீழ் உள்ள கூர்ம காயத்ரி மந்திரத்தை பலமுறைஜபித்து கூர்ம பகவானை வணங்கி வளம் பெறுவோம்.

**ஓம் தராதராய வித்மஹே**
**பாசஹஸ்தாய தீமஹி**
**தன்னோ கூர்ம ப்ரசோதயாத்.**

**D. சூரியநாராயணன்**

மதிப்புமிகு எழுத்தாளர் ஸ்ரீமதி காந்தலக்ஷ்மி சந்திரமௌலி அவர்கள் எழுதிவரும் **"பெற்றோர்களே! கவனியுங்கள்!"** கட்டுரையின் பாகம் 2 விரைவில் புத்தகமாக வெளிவர உள்ளது.

**"பெற்றோர்களே! கவனியுங்கள்!" பாகம் 1** புத்தகமாக வெளியிட்டு 4000 பிரதிகளை பெற்றோர்களுக்கு கொண்டு சேர்த்துள்ளோம்.

**ஆசிரியர்.**

## சுபக்ருது வருஷம் - ஆனி மாத விசேஷங்கள்

### (ஜுன் 15.06.2022 முதல் ஜுலை 16.07.2022 வரை)

| | | | |
|---|---|---|---|
| *17.06.2022* | ஆனி *3* | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| *24.06.2022* | ஆனி *10* | வெள்ளி | ஏகாதசி |
| *25.06.2022* | ஆனி *11* | சனி | ஸ்ரீ கூர்ம ஜயந்தீ |
| *26.06.2022* | ஆனி *12* | ஞாயிறு | பிரதோஷம்,<br>கார்த்திகை விரதம் |
| *27.06.2022* | ஆனி *13* | திங்கள் | சிவராத்ரி |
| *29.06.2022* | ஆனி *15* | புதன் | அமாவாஸை |
| *03.07.2022* | ஆனி *19* | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| *05.07.2022* | ஆனி *21* | செவ்வாய் | சஷ்டி<br>ஆனிதிருமஞ்சனம் |
| *10.07.2022* | ஆனி *26* | ஞாயிறு | ஸர்வஸயன ஏகாதசி<br>சாதுர்மாஸ்ய விரதம் |
| *11.07.2022* | ஆனி *27* | திங்கள் | ஸோம ப்ரதோஷம் |
| *13.07.2022* | ஆனி *29* | புதன் | பௌர்ணமி, குரு பூர்ணிமா |
| *16.07.2022* | ஆனி *32* | சனி | சதுர்த்தி |

### 29.06.2022 புதன்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரீஷ்மருது ஜேஷ்ட மாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ ஆருத்ரா நக்ஷத்ர வாஸர யுக்தாயாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ அமாவாஸ்ய புண்யகாலே தர்ஸ் ஸ்ராத்தம் தில தர்ப்பண ருபேண அத்ய கரிஷ்யே.

அமாவாஸை தினம் செவ்வாய் / புதன் இரண்டு நாட்கள் வருவதால் அவரவர்கள் ஆத்து வாத்யார்களிடம் தேதி உறுதி செய்து சொள்ளவும்.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 38

## அத்தியாயம் – 2

## "ஸாங்கிய யோகம்"

*சென்றமாதம் வரையிலும் இரண்டாம் அத்தியாயத்தில் 46 ஸ்லோகங்கள் வரை பார்த்தோம். அடுத்து வரும் 47 மற்றும் 48 ஆகிய இரண்டு ஸ்லோகங்களும் கீதையில் மிக மிக முக்கியமான ஸ்லோகங்கள். இவைகளுக்கு மிக நீண்ட விளக்கம் அளிக்க வேண்டியுள்ளது.*

*இனி ஸ்லோகங்களைப் பார்ப்போம்.*

**கர்மண்யேவாதி[4]காரஸ்தே மா பலேஷு கதா[3]சன/**
**மா கர்மப[2]லஹேதுர்பூ[4]ர் மாதே ஸங்கோ[3]ஸ்த்வகர்மணி//**

**(கீ 2-47)**

*பொருள் : உனக்கு கர்மங்களை ஆற்றுவதில்தான் பொறுப்பு உண்டு. அவற்றின் பயன்களில் ஒருகாலும் உரிமையில்லை. ஆகவே, நீ கர்மங்களின் பயன்களைக் கோருவதற்குக் காரணமாக ஆகாதே. மேலும், உனக்கு கர்மங்களை ஆற்றாமல் இருப்பதிலும் பற்று இருக்கக்கூடாது.*

**"அகர்மணி"** = *கர்மம் செய்யாதிருப்பதில்* **"தே"** = **உன்னுடைய** **"ஸங்க"** = *பற்றுதல்* **"மா அஸ்து"** = *இருக்கலாகாது நீ கர்மம் செய்யாமல் சும்மா இருக்கக்கூடாது.*

*அதாவது 1.கர்மத்தில் அதிகாரம் உண்டு. 2. அதன் பலனில் உரிமை பாராட்டாதே 3. வினைப்பயன் விளைவிப்பவன் ஆய்விடாதே 4. நீ ஒன்றும் செய்யாமல்*

இருக்காதே. இந்த ஸ்லோகத்தை பொதுவாக பொருள் கொண்டால் கர்மம் செய்யமாத்திரமே அதிகாரம் உண்டு. பலன் கேட்பதில் இல்லை. பலன் கருதி காரியத்தைச் செய்யக்கூடாது'' என்று தான் வரும்.

இந்த ஸ்லோகத்தை சற்று ஆழமாக படித்தால்தான் அதன் அர்த்தம் புரியும். பகவான் இந்த ஸ்லோகத்தை யுத்த களத்தில் கூறுகிறார். பாண்டவர்கள் இழந்த ராஜ்யத்தை மீட்பதற்காக யுத்தம் செய்ய வந்துள்ளார்கள்.

யுத்த களத்தில் அர்ஜுனனும் மற்றவர்களும் வந்திருப்பதே யுத்தம் செய்து அதன் பலனை அனுபவிக்கத்தான். அப்படி இருக்கும்போது பகவான் "அர்ஜுனா கர்மம் செய், பலனை எதிர்பார்க்காதே' என்று கூறியிருப்பாரா? சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஸ்லோகத்தை "வேலை செய்வது மட்டுமே நமது பொறுப்பு, சம்பளம் கேட்க உரிமை இல்லை'' என்பது போல் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறோம்.

ஒரு வாலிபனையோ அல்லது வேலை செய்யும் ஒருவரையோ பார்த்து "நீங்கள் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பது அல்லது மதிப்பிடுவது எது?'' என்று கேட்டால் அவர்கள் அனைவரும் கூறும் பதில் "வெற்றி மற்றும் பணம்'' என்றுதான் கூறுவார்கள். எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் வெற்றி அடைய வேண்டும். அந்த வெற்றியிலிருந்து பணம் கிடைக்க வேண்டும். இது எல்லோருடைய மனதிலும் உள்ள இரண்டு ஆசைகள்.

நாம் செய்யும் செயல்கள் சரியானதாகவும், நியாயமானதாகவும் இருந்தால் அதன் நன்மை தானாகவே நம்மை வந்து அடையும். நாம் செய்யும்

எந்த கர்மத்தையும் விருப்பமானவர்களுக்காகச் செய்கிறோம், கடவுளுக்குச் செய்கிறோம் என்றஅர்ப்பணிப்போடு செய்ய வேண்டும். அப்போது தான் அதன் நன்மை தீமை நம்மை பாதிக்காது.

**“தட்சன்”** யாகம் நடத்தினான். **“அர்ஜுனன்”** யுத்தம் செய்தான். இரண்டின் விளைவுகளும் நேர் எதிராக முடிந்தன. தட்சனின் யாகம் யுத்தமாக மாறி அவனை அழித்தது. காரணம் அவனிடத்தில் அகம்பாவம் இருந்தது. யாகம் அழிந்தது. அர்ஜுனனின் யுத்தத்தில் தர்மம் இருந்தது. அதனால் அந்த யுத்தம் யாகமாக மாறி அர்ஜுனனுக்கு அழியாப் புகழைத்தந்தது.

**“ஈசாவாஸ்ய உபநிஷதத்தில்” வரும் ஒரு ஸ்லோகம்.**

**குர்வன்னேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதக்ம் ஸமா/**
**ஏவம் த்வயி நாய்தேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே//**
**(ஸ்லோகம் 2)**

**பொருள் :** கடமைகளைச் செய்தபடியே நூறு ஆண்டுகள் வாழ விரும்பு (உலகை அனுபவித்து வாழ விரும்புகின்ற) உன்னைப் போன்றவர்களுக்கு இதைத்தவிர வேறு வழி இல்லை (இவ்வாறு வாழ்வதால்) கடமைகள் உன்னைப் பற்றுவதில்லை.

உலகில் வாழ வேண்டும். அதற்கு வேலை செய்தாக வேண்டும். கடமைகளைச் செய்யாமல் யாரும் வாழமுடியாது. எந்த வேலையைச் செய்தாலும் அதற்கு விளைவு ஒன்று இருக்கும், அது நல்லதாக இருக்கலாம். அல்லது கெட்டதாக இருக்கலாம், இரண்டும் கலந்ததாககூட இருக்கலாம். ஆனால் விளைவு ஒன்று இருந்தே தீரும். விளைவு எதுவானாலும்

அது நம்மை பிணைக்கிறது. அந்த பதிவு நாம் மேலும் அந்த செயலைச் செய்யுமாறு தூண்டுகிறது. மீண்டும் நாம் அந்த வேலையைச் செய்கிறோம். இவ்வாறு வேலை தொடர்கிறது. ஆனால் உலகை இறைவனுக்கு உரியதாக கண்டு அவரது சொத்திற்கும் சுகத்திற்கும் ஒரு பொறுப்பாளனைப்போல் வாழ்ந்தால் அந்த ரீதியில் வேலை செய்தால் அந்த வேலையின் பலன் நம்மை பிணைக்காது. பலன் நம்மைப் பிணைக்காததால் அத்தகைய வேலை அக வளர்ச்சிக்கான ஓர் ஆன்மீக சாதனையாக ஆகிவிடுகிறது.

கீதை தொடரும்...

கடந்த 15.05.2022 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு மும்பை 'ட்ரோம்வே' யில் உள்ள ஸ்ரீ பெரியாயி அம்மன், ஸ்ரீ முனீஸ்வர ஸ்வாமி கோயில் ஸ்ரீ மாசானகாளி சன்னதியில் சப்த கன்னிமார் பூஜை 27 சுமங்கலிகள் பூஜை, மஹா தீப ஆரத்தி பூஜை மிகச்சிறப்பாக நடைபெற்றது. நம் பெருமை மிகு **ப்ரம்ஹ ஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்** மும்பை சென்று மும்பை ஹாரத்தி நிகழ்வை முன்னின்று நடத்தியது. நம் எல்லோருக்கும் மிகப் பெருமை மிகு தருணமாகும். அதை நினைவு படுத்தும் விதமாக ஸ்ரீ முனீஸ்வர மாமாவை கௌரவப்படுத்தும் விதமாக, வேளச்சேரி தாம்பிராஸ், வேதபாரதி, அன்னை இந்திராநகர் குடியிருப்பு நலச்சங்க நிர்வாகிகள் மாமா அவர்கள் இல்லத்தில் 22.05.2022 அன்று பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்தினார்கள்.

**ஆசிரியர்**

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 18

*ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்களை* **“தசாவதாரங்கள்”**, *அதாவது 10 அவதாரங்கள் என்று கூறுவார்கள். இவற்றில் கடைசியில் உள்ள* **“கல்கி”** *அவதாரம் தவிர மற்ற ஒன்பது அவதாரங்களையும் பகவான் எடுத்துவிட்டார். ஆனால் ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் 22 என்று கூறுகிறது.*

*ஸ்ரீமத் பாகவதம் ஸ்கந்தம் 1, அத்தியாயம் 3, ஸ்லோகங்கள் 6 முதல் 25 வரையிலும் பகவான் எடுத்த 22 அவதாரங்கள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றைப்பற்றி விவரமாக பார்ப்போம்.*

*1. பகவான் எடுத்த முதல் அவதாரம் =* **“கௌமார ரூப’’** *அவதாரம்.* **“கௌமாரம்’’** *என்பது சனத்குமாரர்களைக் குறிக்கிறது. இவர்கள் பிரம்மாவின் நான்கு புத்திரர்கள். 1. சனத்குமாரர், 2.சனகன், 3.சனந்தன், 4.சனாதனன் இவர்களை* **“சனகாதிகள்”** *என்று கூறுவார்கள். இவர்கள் எப்போதும் 6 வயதுடைய ப்ரம்மச்சாரிகளாகத்தான் இருப்பார்கள். இதிலிருந்து பகவான் ப்ரம்மச்சரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது தெரிகிறது. ப்ரம்மச்சரியத்தை உண்மையாக கடைபிடிப்பவர்கள் மிகுந்த ஞாபக சக்தி உடையவர்களாகவும், எதையும் சீக்கிரத்தில் க்ரஹிக்கும் சக்தி உடையவர்களாக திகழ்வார்கள். அதனால்தான் உண்மையான ப்ரம்மசாரிகள் ஸ்லோகங்களை சீக்கிரம் கற்றுக்கொள்கிறார்கள். (ஸ்ரீமத் பாகவதம் ஸ்கந்தம் 1- அத்தியாயம் 3 – ஸ்லோகம் 6 – இந்த அவதாரத்தை கூறுகிறது)*

*2. பகவானின் இரண்டாவது (த்விதீயம்) அவதாரம் =* **வராஹ (பன்றி)** *அவதாரம். ஹிரண்யனின் தம்பி ஹிரண்யாக்ஷகன் என்றஅசுரன் பூமியை கைப்பற்றி சமுத்திரத்திற்கு அடியில் எடுத்துச் சென்றபோது, பூமியை காக்கும் பொருட்டு பகவான்* **"வராஹ"** *(பன்றி) அவதாரம் எடுத்து இரண்யாக்ஷகனை போரில் வதைத்து பூமியை மேலே கொண்டுவந்தார் என்பது ஐதீகம் (பா 1-3-7)*

*3. பகவானின் மூன்றாவது அவதாரம் =* **நாரதர்** *அவதாரம்.*

*"நாரதர்" பிரம்மாவின் புதல்வர். இவர் தேவ ரிஷி. மஹாவிஷ்ணுவின் அதிதீவிர பக்தர். பகவானின் நாமத்தை எங்கும் சொல்ல வேண்டும். இதற்காகவே பகவான் நாரதராக அவதாரம் எடுத்தார். இவர் பிரபஞ்சம் பூராவும் சுற்றி ஒருவரை பற்றி ஒருவரிடம் சொல்லி கலகத்திற்கு காரணமாக இருப்பவர். ஆனால் ஒருபோதும் நெஞ்சில் தீய எண்ணமோ, வஞ்சகமோ இல்லாத பரிசுத்தமான ஆன்மா. அவருடைய கலகம் கடைசியில் நன்மையாகவே முடியும். அதனால்தான் "நாரதர் கலகம் நன்மையில் முடியும்" என்றபழமொழி உண்டானது. (பா 1-3-8).*

*4. பகவானின் நான்காவது அவதாரம் =* **நர-நாராயண** *அவதாரம்.* **"நர நாராயணர்'** *என்பவர்கள் பகவான் மஹாவிஷ்ணு எடுத்த இரட்டை அவதாரம். தவத்தின் மஹிமையை உலகிற்கு எடுத்துகாட்டவே பகவான் இந்த அவதாரத்தை எடுத்தார்.* **"நரன்"** *என்பது மனிதத் தன்மையையும்,* **"நாராயணா"** *என்பது தெய்வத் தன்மையையும் விளக்குகிறது. விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் வரும் பகவானின் 1000 நாமங்களில் 245ஆவது நாம* **"நாராயண"** *என்னும் நாமம். இந்த அவதாரத்தில்தான் பகவான்* **"ஓம் நமோ நாராயண"** *என்றஎட்டு எழுத்து மந்திரத்தை உபதேசித்தார்.*

பிற்காலத்தில் மஹாபாரதத்தில் "நரன்'' அர்ஜுனனாகவும் "நாராயணன்'' பகவான் கிருஷ்ணனாகவும் தோன்றினார்கள் என்று கூறுவார்கள். பத்ரிநாத் கோவிலில் நர-நாராயணர்கள் சாளக்கிராமம் வடிவில் காட்சி தருகிறார்கள். (பா 1-3-9)

5. பகவான் எடுத்த ஐந்தாவது அவதாரம் மிக முக்கியமான அவதாரம் **"கபிலர்"** அவதாரம்.

ஆன்மீக கருத்துக்களையும், ஆன்மீக ஞானத்தையும் அனைவருக்கும் போதிக்க வேண்டும் என்பதற்காக பகவான் எடுத்த அவதாரம்தான் "கபிலர்" அவதாரம். கர்தம பிரஜாபதிக்கும் தேவஹூதிக்கும் மகனாக பகவான் பிறக்கிறார். பகவான் கர்தம பிரஜாபதியிடம் "நான் தங்களிடம் என் அம்சத்தோடு புத்ரனாக தோன்றி ஸாங்க்ய யோகத்தை உபதேசிக்கப்போகிறேன்" என்கிறார். (பா 3-21– 32)

இந்த ஸ்ரீ கபிலவாசுதேவரின் சரித்திரம் ஒரு மஹா புண்ணிய சரித்திரம். ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீகபில அவதாரம் 3ஆவது ஸ்கந்தத்தில் 20ஆவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தனி கட்டுரையில் எழுதவுள்ளேன்.

6. பகவானின் 6ஆவது அவதாரம் **"தத்தாத்ரேயர்"** அவதாரம். பிரம்மா படைத்த ஏழு ரிஷிகளில் **"அத்ரி மஹரிஷி''** இரண்டாமவர் இவருடைய மனைவி "கர்தபிரஜாபதியின் புதல்வி **"அனுசூயை'',** புத்திர பாக்கியத்தை வேண்டிய அத்ரி மஹரிஷிக்கு பகவான் தன்னையே மகனாக தந்தார். திரிமூர்த்திகளின் திருவுருவின் ஒரே வடிவமான அவதாரம். மோட்ஷம் அடைவதற்கான ஆத்மவித்தையைப் பற்றியும், பரமாத்மாவைப் பற்றி அறிந்துகொள்ளவும் உணர்த்தியவர் **"தத்தாத்ரேயர்"** (பா 1-3-11)

தொடரும்...

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 3 அவதார மஹிமை பாகம் 8**

## அத்தியாயம் – 3
## குழந்தை பருவம்

சிவகுரு தம்பதியர் குழந்தையை பக்தியும், ஞானமும் நிறைந்த சூழ்நிலையிலேயே வளர்த்து வந்தனர். ஒரு வயது ஆனதும் குழந்தை சங்கரன் பேச ஆரம்பித்துவிட்டான்.

மூன்றாவது வயதில் சிவகுரு நல்ல முஹுர்த்தத்தில் குழந்தைக்கு **"சௌளம்"** என்ற வைதீக ஸம்ஸ்காரத்தை (அதாவது குடுமி வைக்கும் ஸம்ஸ்காரம் "சௌளம்" என்றால் "குடுமி" என்று அர்த்தம்) செய்து அக்ஷராப்யாஸமும் செய்துவைத்தார். மூன்று வயதிற்குள் குழந்தை சங்கரர் அதி மேதாவியாக விளங்கி சாஸ்திரங்களை எல்லாம் க்ரஹிக்கத் தொடங்கிவிட்டான்.

சில தினங்களில் சங்கரருடைய வாழ்க்கையில் ஒரு தெய்வீக ஸம்பவம் நிகழ்ந்தது. காலடியில் **"மாணிக்க மங்கலம்"** என்ற அக்ரஹாரத்தில் உள்ள **"கார்த்யாயனீ தேவி"** கோவிலில் சிவகுருவின் முன்னோர்கள் தினசரி பூஜை செய்துவந்தார்கள். இந்த கோவிலில் அம்பாள் ஸரஸ்வதி மூர்த்தியாக இருக்கிறாள். சிவகுருவும் அந்த கோவிலில் பூஜை செய்துவந்தார். (கேரளீய ஸங்கர விஜயத்தில் இந்த விவரம் உள்ளது) சிவகுரு தினமும் அம்பாளுக்கு பால் நிவேதனம் செய்து எடுத்துவந்து குழந்தை சங்கரருக்கு கொடுப்பார். அப்படி கொடுக்கும்போது இது தேவி

குடித்த பால் என்று சொல்லி கொடுப்பார்.

ஒரு நாள் சிவகுரு அவசரமாக வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால் குழந்தை சங்கரனிடம் அம்பாளுக்கு நிவேதனம் செய்ய பாலை கொடுத்தனுப்பினார்கள். குழந்தை பாலை தேவியின் முன் வைத்துவிட்டு அம்பாள் வருவாள் பாலை அருந்துவாள் என்று காத்திருந்தான். ஆனால் அம்பாள் ப்ரத்யக்ஷமாகி பாலை குடிக்கவில்லை. குழந்தை சஙகரன் அழுதுகொண்டே "அப்பா கொடுத்தா மாத்திரம் பாலை குடிக்கிறாய் நான் தந்தால் குடிக்க மாட்டேன் என்கிறாயே" என்று கூறினான். உடனே அம்பாள் அந்த கிண்ணத்தில் இருந்த பால் முழுவதையும் குடித்துவிட்டாள். இதைக் கண்ட குழந்தை மீண்டும் அழுதுகொண்டே "தினமும் அப்பா நீ குடித்த பால் என்று கொண்டுவந்து கொடுப்பார். ஆனால் இன்று நீ எனக்கு மிச்சம் வைக்காமல் எல்லா பாலையும் குடித்துவிட்டாய்" என்று கூறினான். உடனே தேவி சங்கரனை எடுத்து தன்மடியில் வைத்துக்கொண்டு **"ஸ்தன்ய பானம்"** (தன் மென்முலைப்பாலை) கொடுத்தாளாம். இந்த ஸம்பவத்தை பிற்காலத்தில் ஸ்ரீ சங்கரர் எழுதிய தன்னுடைய **"ஸௌந்தர்யலஹரியில்"** கீழ்கண்ட ஸ்லோகத்தில் விளக்குகிறார்.

**தவ ஸ்தந்யம் மந்யே தரணிதரகன்யே ஹ்ருதயத :**
**பய : பாராவார : பரிவஹதி ஸாரஸ்வதமிவ /**
**தயாவத்யா தத்தம் த்ரவிட-சிசு ஆஸ்வத்ய தவ யத்**
**கவீநாம் ப்ரௌடாநாமஜநி கமநீய : கவயிதா //**
**(ஸ்லோகம் 75)**

**பொருள் :** *மலையரசன் மகளே! உந்தன் முலையிலிருந்து பெருகும் பால் இதயத்திலிருந்து உற்பத்தியாகும் அமுதப்பெருக்கு போன்று சொல்லின் செல்வியான ஸரஸ்வதியே இவ்வடிவம் தாங்கிப் பெருகுகிறாள் என எண்ணுகிறேன். ஏனெனில் கருணை மிகுந்த உன்னால் கொடுக்கப்பட்ட உந்தன் முலைப்பாலைப் பருகிய த்ராவிடக் குழந்தை தலை சிறந்த கவிஞர்களுள் மனம் கவரும் ஓர் கவிஞனாய் ஆகிவிட்டாரோ?*

*சங்கரன் தென் இந்தியாவில் தோன்றியதால் ஸ்லோகத்தில்* **வரும் "த்ராவிட சிசு"** *என்னும் சொல் சங்கரரையே குறிக்கும்.*

*(இன்றும் குழந்தைகளுக்கு "அக்ஷராப்யாஸம்" செய்யும் போது பசும்பாலில் "ஐம்" எனும் பீஜத்தை எழுதி குழந்தைக்கு கொடுப்பார்கள். அப்படி கொடுத்தால் குழந்தை சிறந்த மேதாவி ஆவான் என்பது ஐதீகம்)*

*குழந்தை சங்கரன் அம்பாளுக்கு பால் நிவேதனம் செய்த "மாணிக்கமங்கலம்" "கார்த்யாயினி" கோயில் இன்றும் காலடியிலிருந்து 3 கி.மீ. தூரத்திலும், எர்ணாகுளத்திலிருந்து 32 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இந்த கோவிலில் சிறப்பான பூஜைகளும் விழாக்களும் நடைபெற்று வருகிறது?*

*அத்யாயம் தொடரும்..*

## வாசகர் கடிதம்

*ஸ்ரீ பரசுராமருடன் புத்தகம், கட்டுரை வடிவமைப்பு, புதிய தகவல்களுடன் மிக அருமை.*

**ஸ்ரீ ஸ்வாமிநாதன்,** *பம்மல்.*

## குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே!!! நலமாக இருக்கிறீர்களா?*

*சென்றமாதம் பறவைகளின் ராஜா* **“கழுகு”** *வாழும் விதம் குறித்து கூறினேன் அல்லவா? அதன் தொடர்ச்சியை இந்த மாதம் பார்ப்போமா?*

*4. கழுகு ஒருபோதும் இறந்த மற்றும் அழுகியவற்றை உண்ணாது. எப்போதும் தான் பிடித்த புதிதான இரையினையே உண்ணும். ஆனால் மனிதர்களாகிய நாம் இரண்டு அல்லது மூன்று நாள் பழைய உணவை உண்கிறோம். அதனால் வயிற்று உபாதைகளால் அவதியுறுகிறோம். எப்போதும் சமைத்த சூடான உணவையே உண்ண வேண்டும்.*

*5. மழை காலத்தில் மற்றபறவைகள் மரத்திலோ அல்லது பெரிய கட்டிடங்களின் மறைவிலோ ஒதுங்கிவிடும். ஆனால் கழுகு மேகத்திற்கு மேல் பறக்க ஆரம்பித்துவிடும். அப்போது அது மழையில் நனையாது. இது நமக்கு எதை சொல்லித்தருகிறது? நாம் வாழ்க்கையில் திட்டமிடும் ஒவ்வொரு செயலும் பெரிய நிலையில் இருக்க வேண்டும். துணிவோடு செய்ய வேண்டும். அப்போதுதான் நம் வளர்ச்சி சிறந்ததாக இருக்கும். அதற்காக அகல கால் வைக்கக்கூடாது.*

*6. கழுகு முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளியே வந்தபின் அவை அந்த கூட்டில் சுகமாக பாதுகாப்பாக இருக்கும். அப்படி இருந்துவிட்டால் அவை வளர்ந்ததும் தன்னைப்போல் வலிமையாகவும், சுதந்திரமாகவும் இருக்க முடியாது என்று நினைக்கும் தாய் கழுகு என்ன செய்யும் தெரியுமா? குஞ்சுகள் பறக்க வேண்டிய காலம் வரும்போது தாய் கழுகு கூட்டில்*

மெத்துமெத்தான பகுதியை கலைத்துவிட்டு சிறு குச்சிகளின் கூர்மையான பகுதிகள் வெளிப்படும்படி செய்து கூட்டின் சொகுசுத் தன்மையை மாற்றிவிடும்.

கழுகு குஞ்சுகள் கூட்டின் விளிம்பில் வந்து என்ன செய்வதென்று அறியாமல் வெளியே எட்டிப்பார்க்கும். அந்த கட்டத்தில் தாய் கழுகு அந்த குஞ்சை கூட்டிலிருந்து வெளியே தள்ளிவிடும். அந்த எதிர்பாராத நேரத்தில் குஞ்சு கஷ்டப்பட்டு சிறகடித்து பறக்க முயற்சி செய்யும். ஒரு சமயம் கீழே விழ ஆரம்பித்தால் தாய் கழுகு வேகமாக வந்து குஞ்சைப் பிடித்து மீண்டும் கூட்டில் கொண்டு வைக்கும். மீண்டும் குஞ்சை தள்ளிவிட்டு தூக்கிவரும் இப்படியே தொடர்ந்து செய்வதால் அந்த குஞ்சு சுதந்திரமாக ஆனந்தமாக தானே பறக்க கற்றுக்கொள்ளும்.

இதுபோல்தான் நம்முடைய வாழ்க்கையும் வாழ்க்கையில் சில கஷ்டங்களும், சில கசப்பான அனுபவங்களும் மனிதனுக்கு அவசியமே. அவற்றில் அவன் தேர்ச்சி அடைந்தால் அவன் வலிமை அடைகிறான்.

கழுகின் மிக முக்கியமான குணத்தை அடுத்தமாதம் சொல்லுகிறேன்.

உங்கள் அன்புள்ள : **"வேதபாரதி" தாத்தா**


**99940 89133**

**99940 89140**


# SRI SASTHA CATERING


*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*


**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## சேவையே மேலான பாக்கியம்



மனிதனாகப் பிறந்தவனுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு. எல்லா பாக்கியங்களுக்கும் மேலான பாக்கியம் பிறருக்கு சேவை செய்வதே.

“சேவை” என்று தெரியாமலே அவரவரும் தமது குடும்பங்களுக்காகச் சேவை செய்கிறோம். அதோடு நமக்குச் சம்பந்தமில்லாத குடும்பத்துக்கு, ஊருக்கு, நாட்டுக்கு, சர்வ தேசத்துக்கும் நம்மால் முடிந்த சேவையைச் செய்ய வேண்டும் என்கிறேன். நமக்கு எத்தனையோ கஷ்டங்கள், உத்தியோகத்தில் தொந்தரவு, சாப்பாட்டுக்கு அவஸ்தை, வீட்டுக் கவலை – இத்யாதி இருக்கின்றன. நம் சொந்தக் கஷ்டத்துக்கு நடுவில், சமூக சேவை வேறா என்று எண்ணக்கூடாது. உலகத்துக்குச் சேவை செய்வதாலேயே சொந்தக் கஷ்டத்தை மறக்க வழி உண்டாகும். அதோடுகூட “அசலார் குழந்தைக்குப் பாலூட்டினால், தன் குழந்தை தானே வளரும்’ என்றபடி, நம்முடைய பரோபகாரத்தின் பலனாக பகவான் நிச்சயமாக நம்மைச் சொந்தக் கஷ்டத்திலிருந்து கைதூக்கி விடுவான். ஆனால் பிறத்தியான் பெறுகிறபலன் ஒருபக்கம் இருக்கட்டும்! நமக்கே ஒரு சித்த சுத்தியும், ஆத்ம திருப்தியும், சந்தோஷமும் ஏற்பட்டு அந்த வழியில் மேலும் மேலும் செல்வோம்.

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை


# அடுத்தவர் துயரத்தில் காணும் சந்தோஷம்



சென்றமாத தொடர்ச்சி..

இரண்டாவது பையனும் தனது கையை மணியின் உள்ளே விட்டு ஆராய்ந்தான். அவனும் அலறிக் கொண்டே வேகமாகக் கையை வெளியே இழுத்துக் கொண்டான். அந்த மணியின் உள்ளே தேள் ஒன்று இருந்தது. அது அவர்களைக் கொட்டியதால்தான், அவர்கள் அலறிக்கொண்டே தங்கள் கைகளை வேகமாக வெளியில் இழுத்துக் கொண்டார்கள்.

முதல் பையன், வேண்டுமென்றே, தான் பட்ட கஷ்டத்தை தனது நண்பனும் அனுபவிக்குமாறு செய்தான். தோழனின் கஷ்டத்தைப் பார்த்து அவன் சந்தோஷித்தான். அடுத்தவர் துன்பத்தில் இன்பத்தைக் காணும் இப்படிப்பட்ட இழிவான மக்களின் செயல் வெறுக்கத்தக்கதாகும். மாறாக, உயர்ந்த மனிதர்கள் மற்றவர்களின் துயரத்தைக் களைந்து, அவர்களை மகிழ்ச்சியூட்ட முற்படுவார்கள். பிறருக்கு நன்மை புரிவதற்காக அவர்கள் எவ்வளவு பெரிய இடைஞ்சல்களையும் பொறுத்துக் கொள்ளத் தயாராய் இருப்பார்கள். முற்றும்.



# தர்மத்தின் குரல் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்ற மாத தொடர்ச்சி 3-4 :*

*நாட்டுப்பாடல்களை எழுதியவர்கள் யார் என்பது எவருக்கும் தெரியாது. அந்த காரணத்தால் அவையும் மனிதரால் இயற்றப்பட்டவையல்ல என்று சொல்ல முடியுமா?*

வேதங்களுக்கும் நாட்டுப்பாடல்களுக்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ளதைவிட மிக அதிகம். நாட்டுப்பாடல்கள் சிறியவை மட்டுமல்ல, சில காலத்திற்கே வழக்கில் இருப்பவை. வேதங்களைப் போன்றவை அல்ல. அவை இலக்கண விதிகளுக்கு உட்பட்டவையல்ல. சில சமயங்களில், அவற்றின் அமைப்புகூட முறையாக இராது. பலநேரங்களில் வலுவான கருத்தாழம் கூட அவற்றில் இல்லாதிருக்கலாம். ஒருவேளை, அவற்றைஇயற்றியவர்கள் தங்கள் பெயர் குறிப்பிடுவதற்குச் சிறிது கூச்சப்பட்டிருக்கலாம். ஆனால், வேதங்கள் ஆழமானவை; நெடியவை, விசாலமானவை. அவற்றின் அமைப்பும் கூட எளிமையானதல்ல. எனவே, இந்த ஒப்புமை சரியானதாகாது.

*“வேதத்தை இயற்றியவர்கள், தங்களின் அடக்கம் காரணமாகத் தங்கள் பெயரைக் குறிப்பிடாமல் இருந்திருக்கலாம் என்று சொல்லலாமா?”*

அவ்வாறெனின், அவர்களின் சீடர்கள், தங்களின் குருவின் பெயர்களை உரக்கக் கூறியிருப்பார்களே; இந்த முறையிலும் கூட, இயற்றியவர் பெயரை யாரும் கேள்விப்பட்டதில்லை!.

தொடரும்..


Rs.1000
inclusive of
tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
WOPPER



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்



**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**

There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

– ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!**




அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற வரும் ஏழை புற்று நோயாளிகளுக்காக நம்ம தர்மசாலாவின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கிறது. தஞ்சம் தேடி வந்த ஏழை புற்றுநோயாளிகள் விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு நமது நம்ம தர்ம சாலாவில் தங்குமிடமும்; மூன்று வேளை உணவும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை புற்று நோயாளிகள் முறையான சிகிச்சையை தடையின்றி பெற்று புற்று நோயிலிருந்து விரைவில் குணமடைந்து தங்கள் குடும்பத்துடன் நிம்மதியாக வாழ்கிறார்கள். ஏழை புற்றுநோயாளிகளின் உயிர் காக்கும் இந்த உயரிய சேவை தொடர்ந்திட நீங்களும் உதவிடுங்கள். காலத்தால் அழியாத பெரும் புண்ணியத்தை உங்களுக்கும் உங்கள் சந்ததியினருக்கும் சேர்த்திடுங்கள்...

**எம்பெருமானுக்கு சேவை செய்வதும்;** ஏழைகளின் பசித்த வயிறுக்கு உணவளிப்பதும்; அதிலும் ஏழை புற்றுநோயாளிகளின் பசியாற்றுவதும் ஒன்றுதான் என்கிற தெளிவான தர்ம சிந்தனையுடன் வருகை தந்த **பெரியவர் ரங்கராஜன்** அவர்கள் நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்க, தான் சார்ந்த **அனுராம் சேவா டிரஸ்ட்** சார்பாக ரூ.50,000/- நன்கொடையை நமது நிர்வாக அறங்காவலர் அவர்களிடம் வழங்கி மகிழ்ந்தார். திரு. ரங்கராஜன் அவர்களும், அனுராம் சேவா டிரஸ்டை சார்ந்தவர்களும் நூறாண்டுகள் நலமுடன் வாழ இறைவனை ப்ரார்த்திக்கிறோம். 🙏

4.5.2022




செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூர் கிராமத்தில் நாம் நிர்மாணிக்க உள்ள **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்லம்** இயற்கைச் சூழலில் அமைய உள்ளது. இதன் கட்டுமானப் பணிகளுக்கு சுமார் **ஆறு கோடி ரூபாய்** செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, இதுவரை இரண்டு கோடி ரூபாய் நன்கொடையாக நம்மிடம் வந்துள்ளது. தற்போது முதற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வேலைகள் முடிந்து 2023 சித்திரையில் நமது இலவச முதியோர் இல்லம் ஏழை முதியவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு



வரவேண்டும் என்கிற எங்களது நல்ல எண்ணம் நிறைவேற உங்களின் தாராள நிதியுதவியை வேண்டுகிறோம். **இம்முதியோர் இல்ல கட்டிட நிதியாக ரூ.5,00,000/- வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும்.** தாங்கள் விரும்பிய தொகையை நன்கொடையாக வழங்குவோர் பெயரும் நமது முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும். **சிந்திப்பீர்... செயலாற்றுவீர்...**

## ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல வரைபடம்



## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**

**vkrishnamoorthy.smt@gmail.com** **www.srimathatrust.org**

## ஔவையார்

ஒவ்வொரு மாதமும் "ஔவையார்" அருளிய **நல்வழி** நூலிலிருந்து மாதம் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் இந்தப் பகுதியில் வெளியாகும்.

**பாடல் 26**

**மானம் குலம் கல்வி வண்மை அறிவுடமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை – தேனின்**
**கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல்**
**பத்தும் பசி வந்திடப் பறந்து போம்.**

**பொருள்** = **மானம்** = தன்மான உணர்வு, **குலம்** = குலப்பெருமை பற்றிய சிந்தனை, **கல்வி** = கற்றகல்வியின் திறமை, **வண்மை** = உடல் வளம், அறிவுடமை = எண்ணிப் பார்க்கும் அறிவு, **தானம்** = கொடை வழங்கும் வள்ளல் தன்மை, **தவம்** = செய்யும் அறநெறி, **உயர்ச்சி** = உயர்வு பற்றிய எண்ணம், **தாளாண்மை** = செயலாற்றமுயலுதல், தேனின் கசிவந்த சொல்லியர்மேல் **காமுறுதல்** = தேனைப்போல் பேசும் பெண்மீது ஆசைப்படுதல் ஆகிய பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்.

**விளக்கம்** = **பசி** மிகவும் கொடுமையானது. ஒருவனுக்கு பசி வந்துவிட்டால் மேலே கூறிய பத்து பண்புகளும் அவனை விட்டு போய்விடும். அந்த நேரத்தில் என்ன செய்கிறோம் என்பதே அவனுக்குத் தெரியாது. **"பரீக்ஷித்"** மஹாராஜா மிகவும் சிறந்த பண்புள்ள அரசன். ஒரு நாள் அவன் காட்டிற்கு வேட்டைக்குப் போனபோது பசியும், தாகமும் அவனை வாட்டியது. கண்ணில் கண்ட ஒரு குடிசைக்குப்போய் அங்கு தவத்திலிருந்த முனிவரிடம் தண்ணீர் கேட்டான். அவர் தவத்தில் இருந்ததால் பேசவில்லை. அந்தநேரத்தில் அரசனுக்கு கோபம் வந்தது. எண்ணிப் பார்க்கும் அறிவு = அறிவுடமை அவனை விட்டு போய்விட்டது. அங்கிருந்த ஒரு செத்த பாம்பை எடுத்து அந்த முனிவரின் கழுத்தில் போட்டுவிட்டு போய்விட்டான். இதற்கு காரணம் **"பசி"** தான்.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 18

*பத்தாம் வகுப்பிற்கு வரும் முன்பே வாழ்க்கையை முடிவு செய்து, இலக்கை நோக்கி செல்ல வேண்டிய காலகட்டம். இது 15-16 வயது இளம் வயதினரிடம் ஏற்படுத்தும் தாக்கம் மிக அதிகம்.*

*உடலளவில் வளர்ச்சி ஆனால் மனமோ கற்பனை உலகில் சஞ்சரிக்கின்றது. இதைப் பெற்றோர்கள் புரிந்து கொண்டால் தான் வழி நடத்த இயலும்.*

**“சென்றஇடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு. (அதிகாரம்–43, குறள் – 422)**

*“மனதை அது போகும் போக்கிற்கெல்லாம் போக விடாமல் தீய கார்யங்களுக்குப் போவதைத் தடுத்து, நல்ல காரியங்களில் ஈடுபட வைப்பது தான் அறிவு” என்கிறார் வள்ளுவர் பெருமான்.*

*அறிவு என்பது மதிப்பெண்களோடு இணைத்துப் பார்த்து பேசும் நமக்கு உணர்த்த என்றோ வள்ளுவம் அளித்த பரிசு மேற்கூறிய குறள்.*

*“ப்ளஸ் டு” முடிப்பதற்குள்ளாகவே கல்லூரிப் படிப்பின் அழுத்தம் துவங்கிவிடுகிறது. உண்மை தான் நம் குழந்தைகளின் எதிர்காலம் பெற்றோர்களை பயமுறுத்துவதை நாம் தினமும் காணும் விஷயம் தானே என்று கடந்து செல்ல இயலாது.*

*அதே சமயம் இந்த இளைஞர் பட்டாளத்தின் மனக்குமுறல்கள், அழுத்தங்கள், பயங்கள் இவற்றைஅவர்கள் வெளிப்படுத்த தயங்கும் வயது.*

அதாவது பெற்றோர்கள் வெடித்துப் பேசலாம் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்!.

“உன்னிடம் தான் உன் பலமும், பலஹீனமும் உள்ளது. உன்னிடம் தான் உன் இலக்கும், அதை நோக்கிய பயணமும் உள்ளது. உன்னிடம் தான் பயமும், தைரியமும் உள்ளது. உன்னிடம் தான் அறிவும், முட்டாள்தனமும் உள்ளது. உன் மனதில் தான் கோபமும், சாந்தமும் உள்ளது. நீ நல்லவனாக, நல்ல உடல் வளத்தோடு, மன தைரியத்துடன் வாழ வேண்டும் என்பது மட்டுமே எங்கள் ஆசை. உன் மதிப்பெண்களை வைத்து உன் கல்லூரி, பணியிடங்கள் மதிப்பிடலாம். ஆனால் நாங்கள் உன்னை இந்த குடும்பத்தின் வாரிசாக, எங்களின் மிக முக்கியமான சொத்து என்று எண்ணுகிறோம். உன் மதிப்பெண்கள் எங்களுக்கு எதுவும் தரப்போவதில்லை. அதன் பெருமையும், சிறுமையும் உனக்கே உரியது” என்று பெற்றோர்கள் எப்பொழுது தங்கள் குழந்தைகளிடம் கூறத்தயாராக உள்ளார்களோ, அப்பொழுதுதான் அந்த குழந்தை ஒரு முழு மனிதனாக உருவெடுக்கும்.

இதைத்தான் வள்ளுவர் “கண் போனப் போக்கிலே கால் போகலாமா” என்று கண்ணதாசனுக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டார்.

“வாழ்க்கையை அதன் போக்கிலே விடுவதை விட, அதை உன் கையில் எடுத்துக் கொண்டால் உன்னால் வெற்றியை எட்ட முடியும். அதுதான் அறிவுச்சார்ந்த பாதை” என்று இன்று கூறவேண்டிய கடமை, (ஆன்லைன் – கொரோனா) ஒவ்வொரு பெற்றோரிடமும் உள்ளது.

மதிப்பெண்கள் ஓர் ஆபீஸுக்குள் செல்வதை தீர்மானிக்கலாம். ஆனால் அங்கு வெற்றிபெறபல்வேறு

விஷயங்கள் தேவை. இவற்றைஒட்டுமொத்தமாக 'Soft Skills' என்று வெளிநாட்டு அறிவாளிகள் கூற, வள்ளுவமும், பகவத்கீதையும், இராமாயணமும் மஹாபாரதமும் இந்த 'Soft Skills' களை வாரி, வாரி வழங்கியுள்ளது. தேடி எடுத்து உங்கள் பிள்ளைகளுக்கு அளிப்பது உங்கள் கடமை.

வாருங்கள், அடுத்த மாதத்திலிருந்து கல்லூரிக் காலம் முடியும் தருவாய், மற்றும் பணியிடைக் காலங்கள் பற்றி பேசுவோம்.

## கோடி காயத்ரீ யக்ஞம்

பிராமணின் உயிர் மூச்சான காயத்ரீ தேவியின் பேரருள் பெற்று புவனம் க்ஷேமம் அடையும் பொருட்டு “கோடி காயத்ரீ” யக்ஞத்தை திட்டமிட்டு வருகிறது வேதபாரதி. அதனை செயல்வடிவம் கொடுத்து நிறைவில் “யக்ஞம்” சிறப்பாக நடைபெறபுதுச்சேரியின் வேதபாரதி கிளையும் செயல்பட்டுவருகிறது. இதுவரையில் 130க்கும் மேற்பட்டோரை இந்த யக்ஞத்தில் இணைத்து அவர்களுக்கு காயத்ரீ ஜப அட்டையும் வழங்கி தொடர்ந்து அவர்களுடன் வேதபாரதி குழுவினர் இலக்கை நோக்கி செல்கின்றனர்.

யக்ஞ நிறைவில் “காயத்ரீ ஹோமத்தை” நடத்துவதற்கான ஆயத்தமும் நடைபெற்று வருகிறது.

அனைவருக்கும் அருள காயத்ரீ மாதாவை பிரார்த்திப்போம்.

**- ஆதிரையன்.**

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## பாட்டிகள் இருவர் - இரண்டாம் பகுதி!



1910 ம் ஆண்டு, ஸ்ரீ ரமண பகவானிடம் வந்து சேர்ந்தவர் இந்த முதலியார் பாட்டி. தில்லையாடியைச் சேர்ந்தவர். விருபாக்ஷ குகையில் ஸ்ரீ ரமணரை சந்தித்த அந்த முதல் தரிசனத்திலே தீர்மானித்துவிட்டார், இனி தன் கையால் தயாரித்த உணவைத்தான் பகவான் உண்ணவேண்டும் என்று. ஊரில் தனக்குச்சொந்தமான நில புலன்களை விற்றுக் கிடைத்த காசைக்கொண்டு பகவானுக்கு உணவு தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். கையிலிருந்த காசும் கரைந்தது. பாட்டியின் வயதும் கூடியது. இருப்பினும் எப்படியோ எதையாவது செய்து பகவானுக்கு உணவு தயாரித்து விடுவார். ஊரை மறந்தார், உறவுகளைத் துறந்தார். பகவானே கதி என்று இருந்துவிட்டார்.

அப்பளம் இடுவார், எள் வாங்கிவந்து அரைத்து எண்ணை தயாரித்து விற்றுக் கிடைக்கும் காசில் பகவானுக்கு உணவு தயாரிப்பார். வேப்பங்கொட்டை பொறுக்கிவந்து எண்ணை ஆட்டி விற்பனை செய்து உணவு தயாரிப்பார். மலைவிட்டு இறங்கிவந்து ரமணாஸ்ரமத்தில் பகவான் தங்க ஆரம்பித்தார். அப்போது பாட்டியின் நிதி நிலைமை மிகவும் மோசமாகியது. ஆஸ்ரமத்திலுள்ளோர், பாட்டியின் நிலைமை புரிந்து, இனி பகவானுக்கு நீங்கள் உணவு தயாரிக்கத் தேவையில்லை. ஆஸ்ரமத்திலிருந்தே

*கொடுத்துவிடுகிறோம் என்றார்கள். முதலியார் பாட்டி பிடிவாதமாக மறுத்துவிட்டார். "என் இறுதி மூச்சு உள்ளவரையில் பகவானுக்கு நான்தான் உணவு தயாரிப்பேன்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார். எப்படியோ யாசகம் செய்தாவது பகவானுக்கு உணவு கொண்டுவந்து கொடுத்துவிடுவார்.*

*முதலியார் பாட்டிக்கு கண்பார்வை மிகவும் மோசமாகிது. பகவானைக் கூட அவரால் சரியாகப் பார்க்க முடியவில்லை. இருப்பினும் அவருக்கு உணவு தயாரித்து தன் கையால் பரிமாறுவதை அவர் நிறுத்தவில்லை. அவ்வாறு ஒரு நாள் பகவானுக்கு இலையில் உணவு பரிமாறும் போது பார்வைக் கோளாறினால் பகவானுக்கு உணவு பரிமாறப்பட்ட இலையில் பாட்டியின் கால்கள் பட்டுவிட்டன. இதனைக் கண்டு கோபமடைந்த ஆஸ்ரம நபர் ஒருவர் பாட்டியை வெகுவாகத் திட்டி, 'இப்படி பகவானையே பார்க்க முடியாத நீங்கள் இங்கு ஏன் வருகிறீர்கள்?' என்று கேட்டுவிட்டார். அப்போதும் முதலியார் பாட்டி, "நான் பார்க்காவிட்டால் என்ன, பகவானின் பார்வை என் மீது விழுகிறதே, அது போதும் எனக்கு" என்று சொல்லிவிட்டார். அப்படி ஒரு அசைக்க முடியாத ரமண பக்தை இந்தப்பாட்டி.*

*ஸ்ரீ பகவானுக்கு முதல் அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடல் மிகவும் மோசமானது. அவரைப் பார்க்க விரும்பினாள் பாட்டி. ஆனால் அப்போது அவர் தனது பார்வைத்திறனை முற்றிலுமாக இழந்திருந்தார். இருப்பினும் பிடிவாதமாக பகவானைப் பார்க்க விரும்பினார். அவரை பகவான் இருந்த ஹாலுக்கு அழைத்து வந்தார்கள். மிகவும் கஷ்டப்பட்டு, பகவானைக் காண முயற்சித்தார். "பாட்டி, நான் நன்றாக இருக்கிறேன். என் உடல் நன்றாகத்தான் இருக்கிறது" என்றார் பகவான். பாட்டிக்கு திருப்தியாக*

இல்லை. ஹாலுக்கு வெளியே சென்று நின்று கொண்டார். பகவான் வெளியே வந்ததும், "பகவான் கொஞ்சம் நில்லுங்கள்" என்றார். பகவான் அந்த தாயின் குரலுக்கு கட்டுப்பட்டார். முதலியார் பாட்டி, அதீத பாசத்துடன் பகவானுடைய உடலை ஸ்பரிசித்துப் பார்த்தார். இப்போது திருப்தியா? என்றார் பகவான். இந்த பாக்கியம் பெற்றஒரே பெண்மணி இவர்தான்.

இவரது தாயுள்ளத்திற்கு மற்றுமொரு நிகழ்வு குஞ்சு ஸ்வாமிகள் மூலம் நமக்குத் தெரியவருகிறது. பகவான் மிகவும் சிறிதளவே சாப்பிடுகிறார் என்றவருத்தம் பாட்டிக்கு இருந்தது. தாயுள்ளம் அல்லவா? சாமர்த்தியமாய் அதிக அளவு சாதத்தை அழுத்தி அழுத்திப் பிடித்து உருண்டைகளாக்கி பகவானுக்குக் கொடுப்பார். பகவான் விளையாட்டாய், பாட்டியின் சாமர்த்தியம் எனக்குத் தெரியாதா? என்ன, அமுக்கி அமுக்கி நிறைய சாதத்தை இப்படிச் செய்கிறாள்" என்று கையால் சாதத்தை உருண்டையாக அமுக்கிக் காட்டினார் பகவான் கையால் அமுக்கி காட்டிய சைகையை அப்படியே திருப்பிச் செய்து, "எது அதிகம், எது குறைச்சல்? எது பெரிது, எது சிறிது? எல்லாம் நம் பாவனையில்தான் இருக்கிறது" என்றார் பாட்டி "நான் சொன்னதை எனக்கே திருப்பிச் சொல்கிறாள் பார்"! என்றாராம் பகவான் இப்படி எத்தனையோ நிகழ்வுகள் பக்தைக்கும் பகவானுக்குமிடையே!

இத்தகைய மகத்துவமான பெண்மணி, தனது கடைசி நாட்களை ரமணாஸ்ரமத்திலிருந்து சற்றேதொலைவில் இருந்த ரமண நகரில் கழித்தார் பாட்டியின் உடல் நலனை அருகில் இருந்து கவனித்துக் கொள்வதற்காக பகவான் குஞ்சு ஸ்வாமி, விஸ்வநாத சுவாமி மற்றும் சூரி நாகம்மா ஆகியோர அனுப்பி வைத்தாராம். இவர்கள் முதலியார் பாட்டிக்கெனவே

தனியாக ஒரு குடில் அமைத்துக் கொடுத்தனர். பகவான் ஸ்ரீ ரமணரும் தினம் பாட்டியின் நலன் பற்றி மிகுந்த அக்கறையுடன் விசாரிப்பாராம்.

1949ம் ஆண்டு பாட்டி மிகவும் வயதாகி, கண்பார்வையை முற்றிலும் இழந்து விட்டதுடன், அனைத்து உறவுகள், கொஞ்சம் நஞ்சம் இருந்த அனைத்தையும் இழந்துவிட்டார். இருப்பினும் பகவானுக்கான உணவு சமைக்கத் தவறவில்லை. அவரின் கடைசி நாளன்று கூட பகவானுக்கு உணவு சமைத்து அது பகவானை சென்று அடைகிறதா என்றும் உறுதி செய்துகொண்டாராம். அத்தோடு நிற்கவில்லை. பகவான் தான் கொடுத்தனுப்பிய உணவினை சாப்பிட்டு விட்டதையும் தனக்கு தெரிவிக்கும்படிக் கூறிவிட்டுக் காத்திருந்தார். அந்த செய்தி கிடைத்ததும் பேரானந்த உணர்வுடன் தன் கண்களை மூடியபடியே இந்தப் பூவுலகிலிருந்து விடைபெற்றார்.

பகவான், குஞ்சு சுவாமிகள் மற்றும் சிலரிடம், முதலியார் பாட்டியை சேஷாத்ரி சுவாமிகள் மற்றும் அழகம்மாள் தாயார் ஆகியோருக்குச் செய்தது போலவே செய்துவிடப் பணித்தார். “என் தோளில் இருந்த மிகப்பெரிய பொறுப்பு இறக்கி வைக்கப்பட்டுவிட்டது’’ என்றாராம். அலங்காரத்தன்னை என்ற பூர்வீகப் பெயர்கொண்ட முதலியார் பாட்டியை, பகவான் ரமணருக்கே தினம் தினம் பிஷாவந்தனம் செய்துவருவதையே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டிருந்த ரமணபக்தையை, நம் நினைவில் நிறுத்தி பிரார்த்தனை செய்வோம். அடுத்து, “முதல் பெண் ஆதீனகர்த்தர்’’ என்றபெருமைக்குரிய ஆன்மீக சாதனைப் பெண்மணியை சந்திப்போம்.

அடுத்த மாதம் தொடரும்...

# லண்டன் பயணம்

பானு வழக்கம்போல எல்லா வார இறுதியிலும் பெங்களூரிலிருந்து ஆத்தூருக்குச் சென்றுவிடுவாள். திங்கட்கிழமை காலையில் பயண சோர்வுடனே ஆபிஸில் களிக்கும் பானுவை, இயல்புக்கு மாறாக பதினோறு மணிக்கு மேனேஜர் மீட்டிங்கிற்கு அழைத்திருந்தார். என்னவாக இருக்கும் என பானுவால் யூகிக்க முடியவில்லை.

மீட்டிங்கில் வழக்கமான ப்ராஜெக்ட் சமாச்சாரங்களை பேசி முடித்த பானுவிற்கு காத்திருந்தது ஓர் இன்ப அதிர்ச்சி. ப்ரெக்ஸிட் ப்ராஜெக்ட்டை துரிதப்படுத்துவதற்காக, லண்டன் ஆஃபிஸிற்கு போவதற்கான அழைப்பு வந்திருந்தது. இன்னும் ஒரு மாதத்தில் கிளம்ப வேண்டி இருந்ததால் வீஸாவிற்கான வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள். இதுவரை பெங்களூர் ஆஃபிஸிலிருந்து எவருமே லண்டனுக்குச் சென்றதில்லை. அதனால் ஒவ்வொரு அடியாக கேட்டு விசாரித்து பயணத்திற்கான வேலைகளை கவனித்தாள்.

சிறு வயதிலிருந்தே லண்டன் என்றால் பெரும் ஈர்ப்பு. பிரிட்டிஷ் மக்களுக்கென்று ஒரு தனி பெருமிதம் உண்டு, உலகையே ஒரு காலத்தில் ஆண்டவர்கள். லண்டன் பிரிட்ஜ், எலிஸபெத் ராணி, தேம்ஸ் நதி, ஷேக்ஸ்பியர், ஹேரி பாட்டர், ஷெர்லாக் ஹோம்ஸ், டயானா, பக்கிங்கெம் பேலஸ் என புத்தகங்களிலும், சினிமாவிலும் அறிந்து ஈர்க்கப்பட்ட விஷயங்களை நேரில் அனுபவிப்பதற்கான வாய்ப்பு. ஒரு மாதம் சிட்டெனப் பறந்தது. பயணத்திற்கான நாளும் வந்தது. முதன்முறையாக தன்னந்தனியாக வெளிநாட்டுப் பயணம்.

துபாய் ஏர்ப்போர்ட்டை போகிறவழியில் வாயைப் பிளந்து பார்த்துவிட்டு, இறுதியாக லண்டன் ஹீத்ரோ ஏர்ப்போர்டிற்கு வந்தடைந்தாள். பெங்களூரிலிருந்து துபாய் வரையிலும் ஏறக்குறைய இந்திய சைவ உணவைப் போன்றசுவை தான். இருந்தாலும் எமிரெட்ஸில் தரும் உணவின் மசாலா வாசனை என்னவோ செய்தது. துபாயிலிருந்து லண்டன் பயணத்தின் கூடவே பன்னும், ரொட்டியும் பானுவுடன் பயணம் செய்ய ஆரம்பித்தது.

லண்டன் ஆஃபீஸ் என பொதுவாக சொன்னாலும், பானு செல்லவிருந்த இடம் பிரண்ட்வுட். அதாவது லண்டனிலிருந்து பிரண்ட்வுட் செல்வதற்கு, சென்னையிலிருந்து காஞ்சிபுரம் போகிறதூரம். ஏர்லைன் வாகனமே அவளை அழைக்க வந்திருந்தது. கார் ஓட்டுனரிடம் பேச்சு கொடுத்ததில் அவர் ஸ்காட்லேன்டைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்தது. இந்தியாவின் தாஜ்மஹாலையும், ஐபில்லையும் நன்கு அறிந்திருந்தார். எல்லாவற்றையும் பதிவு செய்ய வேண்டும் என்றமனநிலையில் ஸ்காட்லேன்ட் காரருடன் ஒரு புகைப்படம் க்ளிக்கிவிட்டு “Holiday Inn” –ல் நுழையும் பொழுது பார்ப்பதற்கு நம்ம ஊர் நட்சத்திர ஹோட்டல்களை விட சுமார் தான்.

பொதுவாக அலுவலக விஷயமாக வெளிநாடு பயணம் செய்பவர்களுக்கு சிறிய சமையலறையைக் கொண்ட அறைகிடைக்கும். ஆனால் பிரண்ட்வுட் கிராமத்தில் அவ்வாறான அறைகள் கிடைக்கவில்லை. அந்த ஊரில் வெயில் காலம் என கூகுள் சொன்னாலும் தமிழ்நாட்டில் வளர்ந்தவர்களுக்கு அந்தக்குளிர் பழக சிறிது காலம் ஆகும்.

தொடரும்....


Find your partner
Best of luck
Brahmin Kalyanam.com
BK MATRIMONY.com
An Auspicious Begining...
(Exclusive Portal for Brahmins)
பிராமணர்களுக்கு மட்டும்
REGISTER & GET
Brides/Grooms Profiles +
Free Horoscope Matching +
TWO YEARS Validity
One time Membership Fees ₹ 1000 only.
Astro Guidance By:
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com

## பசு - சர்வரோக நிவாரணி

தென்னிந்திய நாட்டு இனங்களைப் போன்றேவடநாட்டிலும் சில சிறப்புவாய்ந்த இனங்கள் உள்ளன. இவற்றில் கிர், சிந்தி, காங்கரேஜ், சாஹிவால் போன்றவை முக்கியமானவை. “கிர்'' இன மாடுகள். இவை குஜராத் பகுதிகளில் பெரும்பாலும் வளர்க்கப்படுகிறது. அதிக பால் கொடுக்கும் நாட்டினமான இவை மிகவும் சாதுவானது. இவற்றின் காதுகளும், திமிலும் பெரிதாக இருக்கும். பெரும்பாலும் சிவப்பு நிறத்தில் இருக்கும் இவற்றின் கொம்புகள் வளைந்து காணப்படும். இவ்வகை மாடுகள் எருமைகளைப் போல பெரியவையாகும்.

“காங்கரேஜ்'' – இவை ராஜஸ்தான் பகுதிகளில் வளர்க்கப்படுபவை. கிர் இனத்திற்கு அடுத்ததாக அதிக பால் கொடுக்கும் இனமாகும். இவற்றின் கொம்புகள் கட்டைப் போன்று பெரிதாக ஒரே சீராக வளைந்து காணப்படும். பெரும்பாலும் மயிலையாகவே (சாம்பல் நிறத்தில்) இருக்கும் இவை வறட்சி தாங்கி வாழ்பவை. வறண்ட பகுதிகளுக்கு சிறந்தவை. பார்ப்பதற்கு பிரம்மாண்டமாக இருந்தாலும் அமைதியானவை. வளர்ப்பவரோடு ஒன்றிவிடும். இவை, வளர்ப்போருக்கு ஆபத்து என்றால் மனிதர்களைப் போல முன்னின்று காப்பவை.

“சாஹிவால்'' – குறைவான அளவில் பால் கொடுக்கும் இவை பஞ்சாப் பகுதிகளில் வளர்க்கப்படுபவை. திட்டமான அளவில் திமில் இருக்கும் இவற்றிற்கு கொம்புகள் கிடையாது. இந்த இன மாடுகள் பெரும்பாலும் சிவப்பு நிறத்தில் காணப்படும். இவைகளுடனே, வளர்க்கப்படும்

மற்றொரு இனம் “சிந்தி” ஆகும். இவை சிந்து நதிப் பகுதிகளில் உருவானவை என்பதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் செவலை மாடுகளான இவை திட்டமான அளவில் கொம்புகள் உள்ளவை. இவற்றின் பாலில் அதிகக் கொழுப்புக் சத்துகள் இருப்பது சிறப்பாகும்.

இதுவரை நாம் கண்டதைப்போல் இன்னும் பலவித நாட்டின மாடுகள் உள்ளன, என்றாலும், இவைகளை அடிப்படை வகைகளாகும். நாட்டு மாடுகள் பற்றிய விழிப்புணர்வு ஓரளவிற்கு அதிகமாகி வரும் இன்றைக்கு வளர்ப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருவது ஆறுதலான செய்தியாகும்.

விவசாயிகளுக்கும், இல்லங்களில் வளர்ப்பவர்களுக்கும் தேவையான மாடுகள் வாங்குவதற்கு ஏற்றஇடமாக இயங்கி வந்த மாட்டுச் சந்தைகள் தற்போது இறைச்சி வியாபாரிகள் கூடும் இடமாகி வருகிறது. இங்கிருந்து மாடுகள் (புரோக்கர்கள்) தரகர்கள் மூலமாக கேரளா போன்றஅண்டை மாநிலங்களுக்கு திட்டமிட்டே கொண்டு செல்லப்படுகிறது. ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு வாகனங்களில் மாடுகள் ஏற்றிச் செல்ல நமது இந்திய அரசு சில விதிமுறைகளை வகுத்து, அதனை தொகுத்து தனிச்சட்டமாக இயற்றி உள்ளது.

விவசாயிகள் பெரும்பாலும் அவர்களது தேவைகளுக்கு அருகாமையில் உள்ள சந்தைகளில் வாங்குவதால் அவற்றைகொண்டு செல்வதில் எந்த முரண்பாடும் இல்லை. ஆனால், நாம் பலநேரங்களில் பிரதான சாலைகளில் அதிகளவில் எண்ணிக்கை கொண்ட மாடுகளை ஒரே வாகனத்தில் ஏற்றி செல்வதை காண்கிறோம். அவையாவும் சட்ட விதிகளுக்கு புறம்பானவையாகும். தொடரும்....

ௐ
ஹரி ஓம்
செல் : 94434 95950

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் ஆசிகளுடன்

## பூஜ்யஸ்ரீ வித்யா ஸங்கர சரஸ்வதி ஸ்வாமிகள்

வழிகாட்டுதலில்

# கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022

**ஜப யக்ஞத்தில் கலந்து கொள்பவர்களுக்கான விதிமுறைகள்**

1. உபநயனமான ப்ருமச்சாரிகள், க்ருஹஸ்தர்கள் மட்டுமே இந்த ஜப யக்ஞத்தில் கலந்து கொள்ள முடியும்.
2. ஜப யக்ஞத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தினசரி ஸந்த்யா வந்தனம், அனுஷ்டானம் கண்டிப்பாக செய்ய வேண்டும்.
3. கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2022 நவம்பர் / டிசம்பர் இறுதி வாரத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமையில் எல்லோரும் அமர்ந்து ஹோமம் செய்து, பூர்த்தி செய்யப்படும்.
4. பதிவு செய்பவர்கள் ஸந்த்யா வந்தனம் தவிர தினமும் குறைந்தது 3 மாலை (அதாவது 3x108) ஜபித்து கமிட்டியால் வழங்கப்படும் அட்டையில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
5. சுத்தமான இடத்தில் உட்கார்ந்து ஜபம் செய்தல் அவசியம். காலை, மதியம், மாலை எப்போது வேண்டுமானாலும் ஜபம் செய்து அதனை பதிவு செய்து கொள்ள வேண்டும்.
6. பிறப்பு, இறப்பு தீட்டு காலங்களில் செய்யும் ஜபம் கணக்கில் வராது.
7. உணவு விஷயங்களில் அதிக கவனம் செலுத்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். (தீட்டு, பராண்ணம்)
8. ஜப யக்ஞம் நாள் ஆரம்பம் முதல் பூர்த்தி நாள் வரை இதை ஒரு தவமாக எடுத்துக்கொண்டு செய்தல் அவசியம். கேளிக்கைகள், அனாவசிய பொழுது போக்குகள் தவிர்த்தல் நலம்.
9. தினம் ஒரு ரூபாயாவது அன்னதானத்திற்கு எடுத்து வைத்து, யக்ஞம் நிறைவு நாளன்று கமிட்டியாரிடம் சேர்பிக்க வேண்டும்.
10. தினம் ஸந்த்யாவந்தனத்தின் போதும், யக்ஞத்திற்கு வரும்போதும் பாரம்பரிய உடையில் இருக்க வேண்டும்.
11. ஜப யக்ஞத்தின் பதிவு கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.200/–, 12 வயதிற்கு கீழ் உள்ளவர்களுக்கு ரூ.100/– செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.
12. மாதம் 1 ஞாயிறு காலை 1 மணி நேரம் ஜபம் செய்ய வேண்டும்.
13. தினமும் அட்டையிலுள்ள ஸங்கல்பத்தை சொல்லி ஜபம் ஆரம்பிக்க வேண்டும்.
14. யக்ஞத்தில் பங்குகொள்ளும் உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள பெண்கள் தினமும் ஒரு முறை ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாமம் அல்லது ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாமம் பாராயணம் செய்ய வேண்டும். பாராயணம் முடிந்தவுடன் தினமும் 1 ரூபாயை ஸ்வாமியிடம் எடுத்து வைக்க வேண்டும். ஜப யக்ஞத்தில் கலந்து கொள்ளும் பொழுது அந்த தொகையினை காணிக்கையாக செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். ஜப யக்ஞத்தில் ஹோமம் நடக்கும் பொழுது பாராயணமும் நடக்கும்.

**சென்னையில் நவம்பர் / டிசம்பர் மாதத்தில் ஹோமத்துடன் நிறைவடையும்.**

தொடர்புக்கு :

**ஸ்ரீ சங்கர் - 94451 02193, ஸ்ரீ ரகுநாதன் - 94457 73144, 99949 26537**

# நித்ய ருத்ர பாராயணம்

*புதுச்சேரியில் உள்ள பிரசித்திபெற்ற அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோவிலின் நிர்வாகம், வேதபாரதி செய்துவரும் சத்காரியங்களை கண்டு தங்கள் கோவிலில் தினமும் ருத்ரபாராயணம் செய்ய வேணுமாய் கேட்டுக்கொண்டது.*

*அவர்களின் கோரிக்கையை ஏற்று பிரதி தினம் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை ஒரு மணி நேரம் ஸ்ரீ ருத்ரம், லகுன்யாசம் சமகம், புருஷ ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், துர்க்கா ஸூக்தம் ஆகிய வேதங்கள் திருக்கோவிலில் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.*

*இதற்காக ஒரு தனி குழு அமைத்து ஒவ்வொரும் நாளும் அவரவர் வேலைகளுக்கு ஏற்றவாறு குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பாராயணம் செய்கிறார்கள். பாராயணம் ஆரம்பித்த 48வது நாள் ஒரு மண்டல பூர்த்தியை முன்னிட்டு "ஏகாதச ருத்ர" பாராயணமும், மஹா அபிஷேகமும் செய்யப்பட்டது.*

*தற்போது பாராயணம் தொடங்கி ஓராண்டு பூர்த்தி நெருங்கி வருகிறது. அந்த வைபவத்தை கூட்டாக ஏகாதச ருத்ர பாராயணம் செய்து பகவானுக்கு மஹா அபிஷேகமும செய்ய திட்டமிட்டு வருகிறது. புதுச்சேரியின் வேதபாரதி. எப்போதும் போல ஒவ்வொரு தினமும் பாராயணம் செய்யும் புதுச்சேரி வேதபாரதி குழு லோக க்ஷேமத்திற்காக பிரார்த்தனை செய்து வருகிறது.*

*எல்லோருக்கும் வேதபுரீஸ்வரர் அருள்வாராக.*

**ஆதிரையன்.**

# தென் கயிலாயங்கள்

**(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)**

*இம்மூன்று தலங்களின் சிறப்பைக் காண்போம் :*

**1. திருக்காளத்தி**

*தொண்டை நாட்டுத்தலம், தற்போது ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்துள்ளது! பொன் முகலி (ஸ்வர்ணமுகி) ஆற்றின் கரையில் உள்ளது!*

*ரேணிகுண்டா – கூடுர் புகைவண்டிப் பாதையில் உள்ள இரயில் நிலையம் உடையது! சென்னையிலிருந்து 110 கி.மீ. தொலைவிலும், திருப்பதியிலிருந்து 40 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது!.*

*பஞ்ச பூதத்தலங்களில் இது வாயுத்தலம்! அன்பிற்குச் சான்றான கண்ணப்பர் தொண்டாற்றி ஆறேநாளில் வீடுபேறு பெற்றதலம்.*

*அட்டமா சித்திகள் அணைதருகாளத்தி எனும் சிறப்பிற்குரியது!*

*திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நக்கீரர், அருணகிரியார், வள்ளலார் ஆகியோர் மனமுருகப் பாடிமகிழ்ந்த தலம்! ஆதிசங்கரர் சிவானந்தலஹரியில் இதனைப் போற்றியுள்ளார்.*

*வீரரை ஆனந்தர் கூத்தர் பாடிய திருக்காளத்திப் புராணமும், கருணைப் பிரகாசர், ஞானப்பிரகாசர் வேலப்ப தேசிகர் ஆகிய மூவரும் சேர்ந்து பாடிய தலபுராணமும் இத்தலத்தை அணி செய்கின்றன!. தெலுங்குக் கவிஞராகிய தூர்ஜாட்டி என்பவர் ஸ்ரீஜ காளஹஸ்தீஸ்வர மகாத்மியம் எனும் நூலை இயற்றியுள்ளார். சேறைக் கவிராயர் உலா ஒன்றும் பாடியுள்ளார்!*

*சிலந்தி-யானை-பாம்பு ஆகிய மூன்றும் வழிபடப்பெற்று பேறுபெற்றதலமாகையால்*

ஸ்ரீகாளத்தி எனப் பெற்றது.

இது ராகு – கேது தோஷம் போக்கும் தலமாகும்! பிக்ஷசாலா போபுரத்தை தாண்டிவந்தால் பாதாள விநாயகரைத் தரிசிக்கிறோம்! இரண்டு கால் மண்டபம் சிறப்பாக உள்ளது!.

வலப்பால் உள்ள திருமஞ்சனக் கோபுரதரிசனம் கிடைக்கிறது! இதன் எதிரில் நாற்கால் மண்டபத்தை அடுத்து அஷ்டோத்ர லிங்க சந்நிதி உள்ளது! அடுத்து பெரிய மண்டபம்! கொடிமர தரிசனமாகிறது! நால்வர் சன்னதி அருகே வட்டம் குறித்துள்ள இடத்தில் நின்றுபார்த்தால் கைலாச மலைக்காட்சியும், சுவாமி விமானத்தையும் தரிசிக்கலாம்!

அடுத்து சரஸ்வதி தீர்த்தக்கிணறு! இயற்கையில் பேசவராத குழந்தைகளுக்கு இத்தீர்த்தத்தைக் கொடுத்தால் நல்ல பேச்சுவன்மை பெறுவர்!

அலங்கார மண்டபத்தில் உற்சவர்களைத் தரிசிக்கலாம்! கருவறையில் சுயம்பு வானகாளத்தி நாதன் அற்புத அமைப்பில் தரிசனம் தருகிறார்! தீண்டாத் திருமேனியார்!

சுவாமி மீது தங்ககவசம் சாத்தப்பட்டுள்ளது! இக்கவசத்தில் 27 நட்சத்திரங்களும் பொறிக்கப்பட்டுள்ளது!

மூலவர் எதிரில் கதவருகில் உள்ள இரு தீபங்கள் எப்போதும் அசைந்து கொண்டிருக்கும்! வாயு தலமல்லவா

சந்நிதியில் வேடர் பெருமானாகிய கண்ணப்பரின் மூலத்திருமேனி உள்ளது! இவர் அபிஷேகம் செய்த மூலவர் என்பதால் விபூதிக்குப் பதில் பச்சைக்கற்பூரம் கலந்த தீர்த்தம் தருகின்றனர்!

அம்பாள் ஞானப்பூங்கோதை கிழக்குநோக்கிய

*சந்நிதி! திருவடியில் ஆதிசங்கரர் நிறுவிய அர்த்த மேருவும், இடுப்பில் ஒட்டியாணத்தில் கேதுவும் உள்ளன.*

*இவ்வாறு பல பெருமைகள் உடைய இத்தல தரிசனம் கைலை மலையை தரிசித்த புண்ணியத்தைச் சேர்க்கும்.*

**2. திருச்சிராப்பள்ளி**

*சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் குறுங்குடி மருதனார்,*

*"கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது*
*நெடும் பெருங் குன்றத்து!"*

*என இம்மலையைக் குறிப்பிடுகிறார்.*

*திரிசிரபுரம் திருச்சி என்றழைக்கப்படும் இத்தலம் சோழநாட்டுத் தென்கரைத் தலங்களில் ஆறாவது தலம். தமிழகத்தில் உள்ள மாநாகராட்சிகளில் ஒன்று.*

*எல்லா உயிர்களுக்கும் தந்தையாகிய இறைவன் வணிகப் பெண் ஒருத்திக்கு மகப்பேறு காலத்தில் தாயாக வந்து உதவி செய்தமையால் தாயுமானவர் மாத்ருபூதேஸ்வரர் எனும் பெயர் பெற்றார்.*

*தொடரும்...*




உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY.com
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# ஸமுத்ர ஹாரத்தி

ஸமுத்ர ராஜனுக்கு மஹா ஹாரத்தி செய்வதால் மழை வளங்கள், நீர் நிலைகள் பெருகி, நம்மையும் ஸமுத்ர ராஜனை வாழ்வாதாரமாக கொண்டுள்ள லட்சக்கணக்கான நம் ஸகோதர ஸகோதரிகள் வாழ்வு பிரகாசிக்கும்.

கடந்த ஒரு வருடமாக தமிழகத்தின் ராமேஸ்வரத்தில் ஆரம்பித்து, கன்னியாகுமரி, புதுச்சேரி, திருவான்மியூர் போன்ற பல இடங்களிலும் கடல் சார் மீனவ ஸமுதாய அன்பர்களின் துணையோடு ஸமுத்ர ஹாரத்தி நிகழ்ச்சி நடந்து வருகிறது. வேளச்சேரி **ஸ்ரீமான் முனீஸ்வர சாஸ்திரிகள்** ஆரம்பம் முதல் ஸமுத்ர ஹாரத்தி நிகழ்ச்சிகளில் முன்னின்று நடத்தி ஆதரவு அளித்து இந்நிகழ்வு எல்லா ஊர்களிலும் நடந்திட பெரு முயற்சி எடுத்து வருகிறார்கள்.





# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு “ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்” **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# நிர்வாகக்குழு, செயற்குழு கூடுதல் நிகழ்ச்சி

*புதுச்சேரியில் வேதபாரதியின் கிளை தொடங்கப் பட்டதிலிருந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் மார்கழி மாத பஜனையும் ஒன்று. வழக்கம்போல 2022 – 23 ம் ஆண்டின் தனுர்மாத பஜனை புதுவை வேதபாரதியின் நான்காம் ஆண்டாக சிறப்பாக நடைபெற்றது.*

*மார்கழி மஹோத்ஸவத்தின் நிறைவாக, புதுச்சேரி வரலாற்றில் முதன்முறையாக 16 மூத்த தம்பதியர் கலந்து கொண்ட ஷோடச தம்பதி பூஜை, டாக்டர் கணேஷ், கடையநல்லூர் ராஜகோபால் பாகவதர், நங்கநல்லூர் பாகவதர் ஆதித்யா ரமேஷ் ஆகியோரின் நாமசங்கீர்த்தன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதற்கு தங்கள் உழைப்பை தந்த உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்ட நிகழ்ச்சி கடந்த 10.05.2022 அன்று நடைபெற்றது. குடும்பத்தோடு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*நடந்துமுடிந்த நிகழ்ச்சிகளை மேலும் சிறப்பாக எதிர்வரும் காலங்களில் நடந்துவது பற்றியும் நடப்பு ஆண்டிற்கான நிகழ்ச்சிகள் பற்றியும் பேசப்பட்டது. நடப்பு ஆண்டு நிகழ்ச்சிகளில் “கோடி காயத்ரீ” யக்ஞம், மார்கழி பஜனை, யுவஸ்ரீ நிகழ்ச்சி, அவ்வை விழா ஆகிய நிகழ்ச்சிகளோடு வேறு சில நிகழ்ச்சிகளும் நடத்துவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.*

*கலந்து கொண்ட உறுப்பினர்களின் ஆர்வமும், தன்னலங்கருதா உழைப்பும் வேதபாரதியின் சிந்ததனைக்கு செயல்வடிவம் கொடுத்து வருகிறது என்பது மனதில் நிறைகிறது.*

**ஆதிரையன்.**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**

## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

**RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23**
**Date of Publication First Week of Every Month**
**Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23**
**Posted at Patrika Chennai, Egmore.**
**Posted between 1 - 7th June 2022**




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ் ® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

_______________

_______________

_______________

_______________

**If not delivered please return to**
**VEDABHARATHI**
**No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.**